**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திருமதி.G.தங்க கார்த்திகா., B.Sc., B.L.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கமுதி.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.(மு.கூ.பொ.)**

**2026ம் வருடம் ஜீன் மாதம் 09ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.53/2025**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | சிக்கல் காவல் நிலையம் குற்ற எண்.89/2024. |
| **1வது எதிரியின் விபரம்** | | |
| 2. | பெயர் | தினகரன் |
| 3. | தகப்பனார்/கணவர் பெயர் | கோவில் பிள்ளை |
| 4. | தொழில் | – |
| 5. | முகவரி | சிறைக்குளம், சிக்கல், கடலாடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம். |
| 6. | வயது | 44/2024 |
| **2வது எதிரியின் விபரம்** | | |
| 7. | பெயர் | பாக்கியராஜ் |
| 8. | தகப்பனார்/கணவர் பெயர் | பால்ராஜ் |
| 9. | தொழில் | – |
| 10. | முகவரி | சிறைக்குளம், கடலாடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம். |
| 11. | வயது | 34/2019 |
| 12. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | 05.02.2026 |
| 13. | விசாரணை முடிவுற்ற நாள் | 15.04.2026 |



THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.09 17:08:06 +0530

<table>
<tr><td rowspan="2">14.</td><td>சாட்டப்பட்ட குற்றச்சாட்டு</td><td>1, 2வது எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2), 351(2) BNSன் கீழ்</td></tr>
<tr><td>வனையப்பட்ட குற்றச்சாட்டு</td><td>1, 2வது எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2), 351(2) BNSன் கீழ்</td></tr>
<tr><td>15.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td>சாட்சிகள் உரிய காலத்தில் ஆஜர்படுத்தப்படவில்லை.</td></tr>
<tr><td>16.</td><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td>
<table>
<tr><th>சாட்சிகள்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>05.02.2026</td><td>05.02.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>05.02.2026</td><td>05.02.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>05.02.2026</td><td>05.02.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>08.04.2026</td><td>08.04.2026</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>08.04.2026</td><td>08.04.2026</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>15.04.2026</td><td>15.04.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>17.</td><td>எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)/ / 351 (1) (b) B.N.S.S ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>21.04.2026</td></tr>
<tr><td>18.</td><td>எதிரிகள் தரப்பு சாட்சிகள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>19.</td><td>எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 320 Cr.P.C/359 BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>20.</td><td>எதிரிகள்/குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 311 Cr.P.C/348 BNSS பிரிவின் படியான மனுக்கள்</td><td>இல்லை</td></tr>
<tr><td>21.</td><td>எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 70(2) Crpc/ 72(2)</td><td>இல்லை</td></tr>
</table>



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.09 17:08:23 +0530

| | | |
|---|---|---|
| | BNSS பிரிவின் படியான மனுக்கள் | |
| 22. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.J.ஆலன் ராயன் |
| 23. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | திரு.B.பூமுருகன் |
| 24. | எதிரிகளின் கூற்று | எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |
| 25. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 09.06.2026 |
| 26. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 09.06.2026 |
| 27. | நீதிபதியின் முடிவு | முடிவாக, 1 மற்றும் 2வது எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2), 351(2) BNSன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து எதிரிகள் பிரிவுகள் 271(1) B.N.S.S Act ன் படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரிகள் சுதந்திரமாக விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.<br>இவ்வழக்கில் தடயசொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடயசொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. |

இந்த வழக்கு 04.03.2025ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு 02.06.2026ம் தேதி இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 திரு.J.ஆலன் ராயன் அவர்களும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.B.பூமுருகன் அவர்கள் ஆஜராகியும், எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை உரிய கவனத்துடன் கேட்டும், ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலித்தும் இன்று **(09.06.2026)** இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

## தீர்ப்புரை

**அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையில் இருந்து வெளிப்படும் அரசு தரப்பு வழக்கு : -**

1. கடந்த 29.07.2024ம் தேதி இரவு 21.00 மணியளவில் புகார்தாரராகிய முனியசாமி என்பவர் 1வது எதிரியிடம் ரூ.50,000/- பணம் வாங்கியது சம்மந்தமாக எதிரிகள் புகார்தாரரை வீடு வரைக்கும் வா என்று சொல்லி கூட்டிச் சென்று புகார்தாரர் வீட்டிற்குள் நுழைந்தவுடன் எதிரிகள் கதவை சாத்திக்கொண்டு புகார்தாரரைப் பார்த்து ஏண்டா தேவிடியா மகனே எங்களை பார்த்தா கேன பயலா தெரியுதா சுன்னி மவனே வாங்குன பணத்தை தரமாட்டையா என்று சொல்லி எதிரிகள் புகார்தாரரை கையால் உடம்பு மற்றும் உதட்டில் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், புகார்தாரர் வெளியே ஓடி வரவும் எதிரிகள் புகார்தாரரைப் பார்த்து பணத்தை கொடுக்கவில்லை என்றால் உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1, 2வது எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2), 351(2) BNSன் கீழ் சிக்கல் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகள் பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அரசு தரப்பு ஆவணங்களின் நகல்கள் அவருக்கு பிரிவு 230 B.N.S.S Act ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. போதிய கால அவகாசத்திற்கு பின் 08.05.2025ம் தேதியன்று எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் பிரிவு. 263(1) B.N.S.S Actன் படி எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2), 351(2) BNSன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவிய போது எதிரிகள் அவர்கள் மீதான குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு

விசாரணைக்கு வேண்டியுள்ளார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு பிரிவு. 265 B.N.S.S Actன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.6** சாட்சிகள் விசாரிக்கப்பட்டு **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்றுப் பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. <u>அரசு தரப்பு சாட்சியங்களின் சுருக்கம்</u>

i. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களில் அ.சா.1 நிகர்நிலை புகார்தாரர் ஆவார். அவரது சாட்சியத்தில், சுமார் 1 வருடத்திற்கு முன்பு எதிரி தினகரனிடம் ரூ.50,000/- கடனாக வாங்கியிருந்ததாகவும், கடந்த 29.07.2024ம் தேதி இரவு 09.00 மணியளவில் சிக்கலில் உள்ள காளிமுத்து நாடார் கடை முன்பாக தான் நின்று கொண்டிருந்த போது எதிரிகள் இருவரும் தன்னை சிறைக்குளம் மேற்குத்தெரு முன்பாக உள்ள சர்ச்சிக்கு அழைத்துச்சென்று கையால் சரமாரியாக கீழ் உதடு, வலது கால் ஆகிய இடங்களில் அடித்ததாகவும், நெஞ்சில் உள்காயம் ஏற்பட்டதாகவும், பின்னர் எதிரிகள் ஆபாசமாக பேசி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அன்றையதினமே இரவு 09.45 மணிக்கு நிலையம் சென்று புகார் அளித்துவிட்டு சிக்கல் அரசு மருத்துவமனை சென்று முதலுதவி சிகிச்சை பெற்று விட்டு இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் 1 வாரம் சிகிச்சை பெற்றதாக சாட்சியம் அளித்துள்ளார்.

ii. அ.சா.2 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக சாட்சிப்பட்டியலில் சேர்க்கப்பட்ட சாட்சிகள் ஆவார்கள். இவர்களில் அ.சா.2 தனது சாட்சியத்தில், சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு அ.சா1. சிறைக்குளத்திலிருந்து தனது வீட்டை நோக்கி ஓடி வந்ததாகவும், அவர் மீது இரத்தமாக இருந்ததாகவும், எதிரிகள் இருவரும் அவரை விரட்டிக்கொண்டு வந்ததாகவும், அப்போது தானும், மாரிமுத்து என்பவரும் எதிரிகளை விலக்கியதாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.3

தனது சாட்சியத்தில், 29.07.2024ம் தேதி இரவு 08.00 மணியளவில் எதிரிகள் இருவரும் அ.சா.1யை எதிரியின் வீட்டிற்குள் வைத்து அடித்து விட்டதாகவும், சிறைக்குளம் சர்ச்சிக்கு பின்னால் உள்ள எதிரியின் வீட்டருகே அ.சா.1யை பார்த்ததாகவும், அ.சா.1ன் உடம்பில் காயங்கள் இருந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

iii. அ.சா.4ன் சாட்சியத்தில், 2 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் இரவு 07.00 மணியளவில் சிறைக்குளம் மேற்குத்தெருவில் உள்ள சர்ச்சிக்கு பின்னால் 1ம் எதிரியும், அ.சா.1ம் சண்டை போட்டுக்கொண்டிருந்ததாகவும், அ.சா.1யை 1ம் எதிரி அடித்து விட்டதாகவும், அப்போது அ.சா.2, மற்றும் அ.சா.4 சண்டையை விலக்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.5 பார்வை மகஜர் சாட்சி ஆவார். அவர் தனது சாட்சியத்தில் 2024ம் வருடம் 7ம் மாதம் ஒருநாள் சிறைக்குளம் கிராமம் மேலக்குடியிருப்பு பகுதியில் சண்டை நடந்தது சம்மந்தமாக சிக்கல் போலீசார் தயார் செய்த பார்வை மகஜரில் போலீசார் கேட்டதால் கையொப்பம் செய்து கொடுத்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

iv. அ.சா.6 புலன் விசாரணை அதிகாரியாவார். அ.சா.6 கடந்த 30.07.2024ம் தேதி தான் நிலைய பொறுப்பில் இருந்த போது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலையக் குற்ற எண்.89/2024 பிரிவுகள் 296(b), 115(2), 351(2) BNS -ன் கீழ் வழக்கு பதிவு செய்து அன்றே சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தும், சம்பவயிட சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், அன்றே 1,2 எதிரிகளை கைது செய்து தக்க பிணையில் விடுவித்ததாகவும் பின்னர் அ.சா.1க்கு சிகிச்சை அளித்த இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மருத்துவரை விசாரித்து காயச்சான்று பெற்று, அத்துடன் வழக்க விசாரணை முடித்து எதிரிகள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

v. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்கள் குறித்து 351 (1) (b) B.N.S.S Actன் படி கேள்விகள் கேட்க எதிரிகள் சாட்சியங்களை பொய் என்றும், தங்கள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்று

தெரிவித்ததன் பேரில் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

6. **<u>தீர்வுக்குரிய பிரச்சனை :-</u>**

i. 1, 2வது எதிரிகள் மீது பிரிவுகள் 296(b), 115(2), 351(2) BNSன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசு தரப்பு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிருபித்துள்ளதா?

ii. அவ்வாறு குற்றம் நிரூபிக்கப்பட்டிருப்பின் எதிரிகளுக்கு கிடைக்ககூடிய தண்டனை விவரம் என்ன? என்பதே இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

iii. இரு தரப்பும் வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

7. **அரசு தரப்பு வழக்கினை எதிரிக்கு எதிராக நிரூபித்துள்ளதா? என்பதை முடிவு செய்ய அரசு தரப்பு சாட்சியங்களை ஆராயும் போது:-**

i. அசா.1 வழக்கின் நிகர்நிலை புகார்தாரர் ஆவார். இவரது சாட்சியத்தில், கடந்த 29.07.2024ம் தேதி இரவு 09.00 மணியளவில் சிக்கலில் உள்ள காளிமுத்து நாடார் கடையின் முன்பாக நின்று கொண்டிருந்தபோது எதிரிகள் இருவரும் தன்னை சிறைக்குளம் மேற்குத்தெருவில் உள்ள சர்ச்சிக்கு அழைத்துச்சென்று அடித்து, ஆபாசமாக பேசி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், அங்கிருந்து இரவு 09.45 மணியளவில் நிலையம் வந்து புகார் அளித்துவிட்டு சிகிச்சை பெற்றுக்கொண்டதாக கூறியுள்ளார். மேலும் இவரது சாட்சியத்தில், 1ம் எதிரி தினகரனிடமிருந்து ரூ.50,000/- கடனாக வாங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். இவரது சாட்சியத்தை பரிசீலிக்கையில், எதிரிகள் எவ்வாறு, என்ன காரணத்திற்காக அ.சா.1யை சர்ச்சுக்கு கொண்டு சென்று தாக்கினார்கள் என்பது பற்றி கூறவில்லை. மேலும் இவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில், இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து போலீசாரிடம் கையொப்பம் செய்து கொடுத்ததாகவும், அதில் என்ன எழுதியிருந்தது என தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii. மேலும் இவரது குறுக்கு விசாரணையில், எதிரிகள் இருசக்கர வாகனத்தில் தன்னை நடுவே அமர வைத்து அழைத்துச்சென்றதாகவும், ஆனால் அதை புகாரில்

கூறவில்லை என்றும், புகாரில் என்ன சங்கதிகள் இருந்தது என்று தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இவரது சாட்சியத்திலிருந்து அ.சா.1, 1ம் எதிரிக்கு ரு.50,000/- கடனாக கொடுக்க வேண்டியுள்ளது என்பது தெரிய வருகிறது. அந்த கடனை திருப்பி செலுத்தக்கேட்டு அதனால் பிரச்சனை ஏற்பட்டதா என்பது குறித்து இவர் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் குறுக்கு விசாரணையில், எதிரிகள் தன்னை இருசக்கர வாகனத்தில் நடுவே அமரவைத்து அழைத்துச்சென்றதாக கூறியுள்ளார். ஆனால் அதில் தன்னைச்சையாக அ.சா.1 விருப்பப்பட்டு சென்றாரா அல்லது வழுக்கட்டாயத்தின் பேரில் எதிரிகள் அழைத்துச் சென்றார்களா என்பது குறித்தும் அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து தெரிய வரவில்லை என்பதால் மற்ற சாட்சியங்களை பரிசீலிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

iii. அ.சா.2 முதல் 4 வரையிலான சாட்சிகள் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அரசுத்தரப்பில் முன்னிறுத்தப்பட்டவர்கள் ஆவார்கள். இவர்களில் அ.சா.2 தனது சாட்சியத்தில், 2 ஆண்டுகளுக்கு முன்பு அ.சா.1 தனது வீட்டை நோக்கி ஓடி வந்ததாகவும், அவர் மீது இரத்தமாக இருந்ததாகவும், எதிரிகள் இருவரும் அவரை விரட்டி வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். இவரது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் இருந்து அ.சா.1 இவருக்கு தம்பி உறவுமுறை என்பது தெரிய வருகிறது. இவரது சாட்சியத்தை பரிசீலிக்கையில், அ.சா.1ன் மீது இரத்தமாக இருந்ததாகவும், அவர் தனது வீட்டை நோக்கி ஓடி வந்ததாகவும் கூறியுள்ளார். ஆனால் அ.சா.1ன் சாட்சியத்தில், அவ்வாறு தன்னை எதிரிகள் துரத்தியதாக எதுவும் கூறவில்லை. எனவே இவர் சம்பவ இடத்தில் இருந்தாரா என்பது குறித்து நீதிமன்றத்திற்கு ஐயப்பாடு எழுகிறது.

iv. அ.சா.3 தனது சாட்சியத்தில், அ.சா.1யை எதிரியின் வீட்டிற்குள் வைத்து எதிரிகள் இருவரும் அடித்து விட்டதாகவும், அவரது உடம்பில் காயங்கள் இருந்ததாகவும் கூறியுள்ளார். ஆனால் அ.சா.1 தனது சாட்சியத்தில், தன்னை எதிரிகள் சர்ச்சுக்கு கொண்டு சென்று அடித்ததாக கூறியுள்ளார். எனவே அ.சா.3ன் சாட்சியம்

அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து முரணாக உள்ளதால் இவரும் சம்பவ இடத்தில் இருந்தாரா என்பது குறித்து ஐயப்பாடு எழுகிறது. அ.சா.4ன் சாட்சியத்தில், மேற்குத்தெருவில் உள்ள சர்ச்சின் பின்னால் அ.சா.1ம், 1ம் எதிரியும் சண்டை போட்டுக்கொண்டிருந்ததாகவும், 1ம் எதிரி அ.சா.1யை அடித்துவிட்டதாகவும் கூறியுள்ளார். அ.சா.1ன் சாட்சியத்தில், சர்ச்சில் சம்பவம் நடந்ததாக கூறியுள்ள நிலையில், இவர் சர்ச்சிற்கு பின்புறம் மேற்படி இருவருமே சண்டை போட்டதாகவும், 1ம் எதிரி அவரை அடித்ததாகவும் கூறியுள்ளார். மேலும் அந்த இடத்தில் 2ம் எதிரி இருந்ததாக கூறவில்லை. இவரது சாட்சியமும் அ.சா.1ன் சாட்சியத்திலிருந்து முரண்படுவதால் சம்பவ இடத்தில் இவர் இருந்தாரா என்பது குறித்து இந்நீதிமன்றத்திற்கு ஐயப்பாடு எழுகிறது.

v. அ.சா.6 புலன் விசாரணை அதிகாரி ஆவார். இவரது சாட்சியத்தில் கடந்த 30.07.2024ம் தேதி அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவைப் பெற்று குற்ற எண்.89/2024 சட்டப்பிரிவு 296(b). 115(2), 351(2) BNS ன் கீழ் வழக்குப்பதிவு செய்து 17.45 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, எதிரிகளை கைது செய்து தக்க பிணையில் விடுவித்து அ.சா.1க்கு சிகிச்சையளித்த இராமநாதபுரம் அரசு மருத்துவரை விசாரித்து அவர் வாதிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியதை பெற்று புலன் விசாரணை முடித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார்.

vi. இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக விசாரிக்கப்பட்ட அ.சா.5ம் சம்பவ இடத்தில் போலீசார் விசாரித்ததாக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.5ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தில், தன்னிடம் தலைமைக்காவலர் 1ம் எதிரியின் வீட்டருகே வைத்து கையொப்பம் பெற்றதாகவும், அந்த தாளில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று தெரியாது என்றும் கூறியுள்ளார். இவரிடம் சார்பு ஆய்வாளர் மற்றும் தலைமைக்காவலர்

வேறுபாடு தெரியுமா என்று கேட்டபோது தெரியும் என்று குறுக்கு விசாரணையில் கூறியுள்ளார். எனவே இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியானவர் சார்பு ஆய்வாளராக உள்ள நிலையில், அ.சா.5 தலைமைக்காவலிடம் கையொப்பம் செய்து கொடுத்ததாக கூறியுள்ளார். மேலும் அந்த கையொப்பத்தை 1ம் எதிரியின் இல்லத்தின் அருகில் செய்து கொடுத்ததாக கூறியுள்ளார். எனவே சம்பவ இடத்தில் வைத்து சார்பு ஆய்வாளர் விசாரித்தாரா என்பது குறித்தும், அரசுத்தரப்பில் நம்பும்படியான சாட்சியம் அளிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

vii. மேற்படி சாட்சிய பரிசீலனையில் இருந்து அ.சா.1, 1ம் எதிரிக்கு ரூ.50,000/– கடன் கொடுக்க வேண்டியிருப்பது தெரிய வருவதாலும், அ.சா.ஆ.5 காயச்சான்றிதழில் யார், எத்தனை நபர்கள் தாக்கினார்கள் என்பது குறிப்பிடப்படவில்லை என்பதாலும், அ.சா.1ன் சாட்சியம் முதல் விசாரணையிலும், குறுக்கு விசாரணையிலும் புகார் குறித்து முரண்பாடாக உள்ளதாலும், கண்ணுற்ற சாட்சிகளாக முன்னிறுத்தப்பட்ட அ.சா.2 முதல் 4 வரையிலான சாட்சிகள் சம்பவ இடத்தில் இருந்தார்களா என்பது குறித்து நீதிமன்றத்திற்கு ஐயப்பாடு எழுவதாலும், போலீசார் சம்பவ இடத்தில் விசாரித்தார்களா என்பது பற்றி நம்பும்படியான சாட்சியம் அளிக்கப்படாததாலும், அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்படி சாட்சியங்களின் ஆய்விலிருந்து எதிரி மீது இதச பிரிவுகள் 296(b). 115(2), 351(2) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்வுக்குரிய பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் பதில் அளிக்கிறது.

viii. இறுதியாக, இந்நீதிமன்றம், எதிரிகள் பிரிவுகள் 296(b). 115(2), 351(2) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று முடிவு செய்து சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, மேற்படி பிரிவுகளின் கீழ் எதிரி குற்றவாளி இல்லை என தீர்மானித்து, மேற்படி எதிரிகளை பிரிவு 271(1) B.N.S.S Actன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சுதந்திரமாக



THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA Date: 2026.06.09 17:09:23 +0530

விடுவிக்கப்படுகிறார். எதிரியின் பிணை பத்திரம் ரத்து செய்யப்படுகிறது.

ix. இவ்வழக்கில் தடய சொத்துகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, தடய சொத்துக்கள் குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் என்னால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்ற முத்திரை வைக்கப்பட்டு 2026ம் ஆண்டு ஜீன் திங்கள் 09ம் நாள் செவ்வாய்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

THANGA KARTHIKA

Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.09 17:10:11 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி(மு.கூ.பொ.)

**அரசு தரப்பு சாட்சிகள்:-**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு.முனியசாமி |
| அ.சா.2 | திரு.ஆறுமுகம் |
| அ.சா.3 | திரு.மாரிமுத்து |
| அ.சா.4 | திரு.வேல் |
| அ.சா.5 | திரு.ஆறுமுகம் |
| அ.சா.6 | திரு.குமரேசன் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:-**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 29.07.2024 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | 30.07.2024 | பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 30.07.2024 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 30.07.2024 | பார்வை மகஜர் |

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.5 | 30.07.2024 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 26.08.2024 | அ.சா.1க்கு வழங்கப்பட்ட காயச்சான்று |

**அரசு தரப்பு சான்றுபொருள்:–** இல்லை

**எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள்:–** இல்லை

**குறிப்பு :–**

1. எதிரிகள் வழக்கு விசாரணையின் போது பிணையில் இருந்தனர்.
2. சாட்சிகள் எவரும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்கப்படவில்லை.
3. தீர்ப்பு பற்றி காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.06.09 17:10:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி(மு.கூ.பொ.)